திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த முந்திரியிலிருந்து பிளாஸ்டிக் உற்பத்தி செய்வதாகச் சொன்னர்களே, அந்தத் திட்டம் எப்படி இருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : யாரேனும் அப்படிப்பட்ட திட்டத்தை ஏற்று நடத்த முன்வந்தால் அரசாங்கம் அதை நிறைவேற்றும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, முந்திரிக் கொட்டை நம்முடைய நாட்டிலிருந்து ஏற்றுமதியாகிக் கொண்டிருந்தது இப்போது குறைந்திருக்கிறது. இதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: முந்திரி ஏற்றுமதியைப் பற்றிய விவரங்கள் இல்லை.

வாடகைக்குத் தொளையிடும் இயந்திரங்கள்

* 474 **வினு—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கூட்டுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினைகளுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை விவசாய இலாகாவில் போரிங் மிஷின் வாடகைக்கு விடும் திட்டத்தின் மூலம் கடந்த 1965, 1966 ஆகிய இரண்டு ஆண்டுகளில் தனித்தனியே வசூலிக்கப்பட்ட வாடகை எவ்வளவு?

(இ) இந்த வருடங்களில் வாடகை பாக்கி ஏதேனும் உண்டா?

(உ) ஆம் எனில், யார் யாரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டியுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) 1965-ல் வசூலிக்கப்பட்ட வாடகை ரூ. 8,266.15, 1966-ல் வசூலிக்கப்பட்ட வாடகை ரூ. 12,782.99.

(இ) இல்லை.

(உ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

Oil Tanker Berth in Madras Harbour

* 475 *Q.*—THIRU U. DENNIS : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal to construct an Oil Tanker Berth in Madras Harbour in Madras City ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) சபைமுன் அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அதைப் பார்க்குமாறு மாண்புமிகு உறுப்பினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

@ 216—218-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.